

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கத்தில் நேற்று (31.08.2023) பல்வேறு துறைகள் சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. உடன் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அரசு செயலாளர் மரு. தாரேஷ் அகமது மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் ஆவடி காவல் ஆணையரக ஆணையாளர் கே.சங்கர், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன், திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.கே.ஜெயக்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீபாஸ் கல்யாண் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன் (திருவள்ளூர்), ஆ.கிருஷ்ணசாமி (பூவிருந்தவல்லி), எஸ்.சந்திரன் (திருத்தணி), சுதர்சனம் (மாதவரம்), டி.ஜெ.கோவிந்தராஜன் (கும்மிடிப்பூண்டி), க.கணபதி (மதுரவாயல்), துரை சந்திரசேகர் (பொன்னேரி) மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆ. ராஜ்குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் மரு.என்.ஓ.சுகபுத்ரா ஆவடி மாநகராட்சி ஆணையர் தர்பகராஜ் இ.ஆ.ப, சார் ஆட்சியர் (பொன்னேரி) செல்வி.ஐஸ்வர்யா ராமநாதன் ஆவடி துணை காவல் ஆணையர் திருமதி. ஜெயலட்சுமி உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.

## காலை உணவுத் திட்டம் தொடர்பாக

# பள்ளி இளம் மாணவர்கள் வரைந்த ஓவியம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!




சென்னை,செப்.1–

கிருஷ்ணராயபுரம் ஒன்றிய நடுநிலைப் பள்ளி இளம் மாணவர்கள் காலை உணவுத் திட்டம் தொடர்பாக ஓவியம் ஒன்றை வரைந்து 'உண்டி கொடுத்தோர்... உயிர் கொடுத்தோரே!' என்று அதில் குறிப்பிட்டி ருந்தனர்.

இந்த ஓவியம் – டிராயிங் எப்படியாவது சி.எம். சாருக்கு அனுப்ப முடியுமா என்று ஆர்வமாக பிடிசாம்பலுக்கு கேட்டிருந்தார். அவரும் இதை தமது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டு முதலமைச்சர் கவனத்தை ஈர்த்தார்.

ட்விட்டர் மூலம் இதைக் கவனித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,

**இந்தக் குழந்தைகளின்**
**மகிழ்ச்சிக்கு முன்பு**
**அத்தனை பொய் பரப்புகளும்**
**தோற்றேபோகும்!**
**அவர்களின் ஓவியத் திறன்**
**மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்**

என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டி தமது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## கழக அயலக அணி துணைச் செயலாளர்

# பரிதி இளம்சுருதி இல்ல மணவிழா வரவேற்பு! அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்து!

## தயாநிதி மாறன் எம்.பி. - மேயர் ஆர்.பிரியா - கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு!

சென்னை, செப். 1-

தி.மு.க. அயலக அணி துணைச் செயலாளர் பரிதி இளம்சுருதி எம்.சி இல்லத் திருமண வரவேற்பு விழா இன்று நடைபெறுகிறது.

அமைச்சர் பி.கே.சேகர் பாபு, தயாநிதி மாறன், எம்.பி. மேயர் ஆர்.பிரியா வாழ்த்துகின்றனர்.



சென்னை அயனாவரம் நினைவில் வாழும் பி.அழகு வேல் பேரனும், டி.லாரன்ஸ் உதயசந்திரிகா ஆகியோரின் புதல்வர் அஜய் (எ) லாசர் டேனியல், இ.பிரகாசம் சந்திரிகா ஆகியோரின் புதல்வி பி.அமுலு ஆகியோரின் திருமண வரவேற்பு விழா இன்று (01.09.2023-வெள்ளிக்கிழமை) அன்று மாலை 6.00 மணி அளவில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் நல்வாழ்த்துக்களுடன் சென்னை40 அண்ணாநகர் காந்திநகர் அரசு மருத்துவமனை எதிரில் உள்ள ஐ.சி.எப். திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இத்திருமண வரவேற்பு விழாவில் இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர் பாபு, தயாநிதி மாறன், எம்.பி, மேயர் ஆர். பிரியா, இரா. கிரிராஜன் எம்.பி, கலாநிதி வீராசாமி எம்.பி. எம்.எம்.அப்துல்லா எம்.பி, ப.தயாகம் கவி, எம்.எல்.ஏ., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., எம்.கே. மோகன்,எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன், மு.எம்.எல்.ஏ., துணைமேயர் சைதை மு.மகேஷ்குமார், கன்னிகை ஜி.ஸ்டாலின், ந.இராமலிங்கம், எம்.சி., ச.பரமசிவம், ஐ.சி.எப். வ. முரளிதரன், கூ.பீ.ஜெயின், திருமதி.சரிதா மகேஷ்குமார், சொ.வேலு, எம்.சி., வே.வாசு, வி.சுதாகர், ச.ஸ்ரீதணி, எம்.சி. எல்.சுந்தராஜன், எம்.சி., ஆர்.எம். ரங்கநாதன், சி.சேகர், டி.சந்திரசேகர், ச.மனோகரன் உள்ளிட்ட மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

அனைவரையும் அன்புடன் வரவேற்கும் நா.அறிவுடைநம்பி, அ.உதயகுமார் (எ) சத்யராஜ், அ.கண்ணன், அ.பார்த்திபன், ஐ.பாலாஜி, எம்.ஜோதிமணி, வி.நிரேஷ், எல். விஜய் டேனியல், பா.ஸ்ரீராம், உ.சதீஷ், பா. சூர்யா, பா.சக்தி ஆன்டோ சர்வேஷ் நிறைவாக கழக அயலக அணி மாநில துணைச்செயலாளர் பரிதி இளம்சுருதி, எம்.சி. நன்றி கூறுகிறார்.

## வட கிழக்குப் பருவ மழை:

# எழும்பூர் தொகுதியில் தூர்வாரும் பணி!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.1-

வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ளும் வண்ணம் சென்னை பெருநகரக் குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்படவிருக்கும் பெருந்திரள் தூர்வாரும் பணியை (Mass Desilting), எழும்பூர் தொகுதியில், சட்டமன்ற உறுப்பினரும் கழக சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், 108வது வார்டு, சேத்துப்பட்டு, சத்தியமூர்த்தி சாலையில் இன்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் சென்னை பெருநகரக் குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியத்தைச் சேர்ந்த மண்டலம் 8இன் பகுதிப் பொறியாளர் ஜெய பிரகாஷ், பணிமனை 107-இன் உதவிப் பொறியாளர் கண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

முன்னாள் பகுதிச் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருஷோத்தமன், முன்னாள் பகுதிப் பொருளாளர் ந.கலையரசன், மாவட்டப் பிரதிநிதி ரஃபீக், பகுதி பிரதிநிதி ந.இளஞ்செழியன், தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் சிலம்பரசன், 108 அ வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார் மற்றும் அசினா பேகம், பிரம்மதேவன், கவிதா, எழும்பூர் ரமேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

### தா.இளையஅருணா தலைமை ! கலாநிதி வீராசாமி, ஜே.ஜே.எபினேசர், ஆர்.டி.சேகர், ஐட்ரீம்.மூர்த்தி முன்னிலை !

# நீட் தேர்வால் மறைந்த மாணவர்களுக்கு வீரவணக்கம் நிகழ்வில் சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணியினர் பெருந்திரளாக பங்கேற்பீர் !

## மாணவர் அணி அமைப்பாளர் வெ.சு.சத்தியநாராயணன் வேண்டுகோள் !

சென்னை செப்:1

நீட் எதிர்ப்பு போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வில் பெருந்திரளாக பங்கேற்பீர் என சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வெ.சு.சத்தியநாராயணன் வேண்டுகோள் வருமாறு :

சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் இன்று (01.09.2023 வியாழக்கிழமை) காலை 9.00 மணியளவில் நீட் எதிர்ப்பு போராளி தங்கை அனிதாவின் திருவுருவப்படத்திற்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி டி.எச்.ரோடு போஸ்ட் ஆபீஸ் அருகில் உள்ள அண்ணா சிலை முன்பாக நடைபெறுகிறது.

தமிழ்நாடு மாணவர்களின் மருத்துவராகும் கனவை சிதைக்கும் உயிர் கொல்லியாக உருவெடுத்துள்ள நீட் தேர்வு திணிப்பை எதிர்த்து முதல் களப்பலியாய் உயிர் நீத்த தங்கை அனிதாவின் நினைவு நாள் செப்டம்பர் 1 அரியலூர் அனிதாவில் தொடங்கி நீட் தேர்வால் ஏற்பட்ட மரணம் குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன் வரை தொடர்கிறது முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான கழக அரசு நீட் தேர்வு தமிழ்நாட்டில் இருந்து ஒழித்துகட்ட அனைத்து வகையான முயற்சிகளையும் முன்னெடுத்து வருகிறது. இதற்கான காலம் வெகு தொலைவில் இல்லை. எனவே மாணவச் செல்வங்கள் தன்னம்பிக்கையுடனும் மன உறுதியுடனும் பொறுமை காத்திருக்க வேண்டுகிறோம்.

எனவே சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மாணவர் அணியினர் பெருந்திரளாக பங்கேற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிகழ்வில் சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே.எபினேசர், ஆர்.டி.சேகர், ஐட்ரீம்.இரா.மூர்த்தி, பகுதி செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், க.ஜெயராமன், அ.முருகன், மண்டல குழு தலைவர் நேதாஜி.யு.கணேசன் இரா.வெற்றிவீரன், மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், பகுதிகழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர், அனைத்து அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் பெருந்திரளாக பங்கேற்க உள்ளனர்.



பல்லாவரம் தொகுதியில் பொதுமக்கள் கோரிக்கைகளை ஏற்று நிலத்தடி நீர், பாதாள சாக்கடை பிரச்சினைகளை தீர்வுகான இ.கருணாநிதி எம்.எல்.ஏ நேரில் ஆய்வு மேற்கொண்டார். இதில் அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## அதானி நிறுவனங்களில் பல ஆயிரம் கோடி முறைகேடாக முதலீடு குறித்து

# நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணை நடத்தப்பட வேண்டும்!

## காங்கிரஸ் கட்சி மூத்த தலைவர் ராகுல் காந்தி பேட்டி!



மும்பை,செப்.1-

அதானி நிறுவனங்களில் பல ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடாக முதலீடு செய்யப்பட்டஉள்ளதாகவும், இந்தியாவிலிருந்து பல ஆயிரம் கோடி ரூபாய், சட்டவிரோதமாக கடத்தப்பட்டுள்ளது என்றும் குற்றம் சாட்டி காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி பேட்டியளித்துள்ளார்.

அதானி முறைகேடு விவகாரத்தில் பிரதமர் மோடி தொடர்ந்து மவுனம் சாதிப்பது ஏன்? என்றும், அதானியின் முறைகேடுகள் குறித்து நாடாளுன்ற கூட்டுக்குழு விசாரணை தேவை என்றம் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

அதானி நிறுவனத்தில் முறைகேடாக முதலீடு செய்யப்பட்ட பல ஆயிரம் கோடி ரூபாய் யாருடையது என்பது குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும், இது குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தி உள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி, அதானி நிறுவனத்தின் முறைகேடுகள் குறித்து பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை சுட்டிக்காட்டினார். இந்தியாவிலிருந்து பல ஆயிரம் கோடி ரூபாய், சட்டவிரோதமாக கடத்தப்பட்டு, மீண்டும் முதலீடாக அதானி நிறுவனத்திற்கு வந்துள்ளதாகவும், அதானி நிறுவனத்தின் முறைகேடுகள் இந்தியாவின் நன்மதிப்பிற்கு உலக அரங்கில் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளதாக ராகுல்காந்தி தெரிவித்தார்.

அதானி நிறுவன முறைகேடுகள் குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அதானி நிறுவனத்தில் முறைகேடாக முதலீடு செய்யப்பட்ட பல்லாயிரம் கோடி ரூபாய் யாருடையது என்பது குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் ராகுல்காந்தி வலியுறுத்தினார்.

100 கோடி டாலர்களுக்கும் மேல் மதிப்புள்ள பணம் இந்தியாவில் இருந்து பல நாடுகளுக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. பின்னர், இந்தப் பணம் இந்தியாவுக்கு திரும்பி உள்ளது. இந்தப் பணம் யாருடையது? பிரதமருக்கு நெருக்கமான ஒருவர் (அதானி) இதனை செய்ய எப்படி அனுமதிக்கப்படுகிறார் என்று கேள்வி எழுப்பிய ராகுல் காந்தி இந்தியாவின் நன்மதிப்பிற்கு உலக அரங்கில் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது என்றும் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

“அதானி குழுமம் பங்கு முறைகேட்டில் ஈடுபட்டிருப்பதாக ஓசிசிஆர்பி (OCCRP) அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து சர்வதேச அளவில் புகழ்பெற்ற இரண்டு பொருளாதார பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு, கேள்விகளை எழுப்பியுள்ளன. இந்தியாவில் இருந்து கோடிக்கணக்கான ரூபாய் பல்வேறு நாடுகள் வழியாகச் சென்று மீண்டும் இந்தியாவுக்கு திரும்பி உள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பணம் யாருடையது? அதானியுடையதா அல்லது வேறு யாருடையதா?

கவுதம் அதானியின் சகோதரர் வினோத் அதானியும், அவருடன் சேர்ந்து இரண்டு வெளிநாட்டவர்களும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அந்த இரண்டு வெளிநாட்டவர்கள் எவ்வாறு அனுமதிக்கப்பட்டார்கள்? இதில் தனக்கு தொடர்பு இல்லை என்பதை பிரதமர் மோடி நிரூபிக்க வேண்டும்.

நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் குறித்த அறிவிப்பு தற்போது வெளியாகி இருக்கிறது. இது பிரதமர் மோடிக்கு ஏற்பட்டிருக்கும் பதற்றத்தின் அறிகுறியாக இருக்கலாம். நாடாளுமன்றத்தில் நான் பேசியபோது அவருக்கு பதற்றம் ஏற்பட்டது. அதன் காரணமாகவே, எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி திடீரென ரத்தானது. தற்போதைய அதானி விவகாரம், பிரதமருக்கு மிக நெருக்கமாக இருப்பதால், அவர் பதற்றத்தில் இருப்பதாக நினைக்கிறேன். அதானி விவகாரத்தை தொடும் போதெல்லாம், பிரதமர் மிகவும் சங்கடமாகவும், மிகவும் பதற்றமாகவும் இருக்கிறார்” என்று ராகுல் காந்தி மேலும் தெரிவித்தார்.

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை!

# உத்திரமேரூர் ஒன்றிய-பேரூர் செயல்வீரர்கள் கூட்டம்!

## ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன் - பேரூர் செயலாளர் என்.எஸ். பாரிவள்ளல் அறிக்கை!

சென்னை, செப்.1-

உத்திரமேரூர் ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரி வள்ளல் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

உத்திரமேரூர் ஒன்றிய, பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 4.9.2023-திங்கட்கிழமை காலை 11 மணிக்கு இந்திராணி அம்மாள் திருமண மண்டபம், உத்திரமேரூரில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய அவைத்தலைவர் தா.சுப்பராயன், பேரூர் அவைத்தலைவர் து.ரமேஷ் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

எஸ்.ருத்திரகோட்டி, க. சுகுணா சுந்தர் ராஜன், ஏ.எம்.கெங்கன்,தே. பாபு, டி.எஸ்.குமார்தேவ், இரா. கார்த்திகேயன், க.மாயகிருஷ்ணன், ஏ.வீரமணி, பி.மகேந்திரன், ஆ. ஜெயகாந்தா, க.அப்துல் ஹக்கீம், வெ.கோவிந்தராஜ், வெ.குணசேகரன், மா.கருணாநிதி, ந.ராஜேந்திரன், ஏ.செல்லமுத்து ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றுகிறார்.

இதில் க.செல்வம் எம்.பி., இரா.நாகன், டி.குமார், பொ.சசிகுமார், ஹேமலதா ஞானசேகரன், வசந்தி குமார், மா.ஏழுமலை, பத்மா பாபு, இளமதி கோவிந்தராஜ், கோ.காளி தாஸ், ஏ.கே.இரமேஷ் பாபு, டி.கே.கோபாலகிருஷ்ணன், டாக்டர் வா.திவாகர், கே.தயாளன், தே.வீராசாமி, எம்.பி. தாமஸ், எ.மூர்த்தி, இ. கண்ணாயிரம், லோ.பவ்யா, டாக்டர் எம். சந்தியா, து.சுந்தர், மு. தாமோதரன், ஆ.நீலகண்டன் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

எனவே இக்கூட்டத்தில் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள் திரளாக கலந்துகொள்ள வேண்டுமாய் ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரி வள்ளல் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.



திருவல்லிக்கேணி பகுதி அவைத் தலைவர் மறைந்த க.வே. செழியன் முதலாம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணியில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் மாவட்ட, பகுதி, வட்டக் கழகத்தினர் பங்கேற்றனர்.